சென்னை 3.5.2011 மாலைச்சுடர்

# லேசர் சிகிச்சை மூலம் கொழுப்பு அகற்றம்

சென்னை, மே.3:

**லைப் அலைவ் சிகிச்சை மையத்தில் மனித உடலில் உள்ள கொழுப்புகளை அகற்றி உடல் எடையை குறைக்கும் ஜீரோனா லேசர் சிகிச்சை முறையை டாக்டர் சுனிதா ரவி அறிமுகப் படுத்தினார்.**

இது குறித்து டாக்டர் சுனிதா ரவி நிருபர்களிடம் கூறியதாவது:-

மனிதர்களின் உடல் எடை அதிகரிப்பதன் மூலம் உடலின் உள் மற்றும் வெளிப்புற அமைப்புகளின் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இதனால் இளம் வயதினர் கூட வயதானவர் போல் தோற்றம் அளிக்கின்றனர்.

உடலில் உள்ள கொழுப்புதளால் தசைச்சுருக்கம், தூக்கமின்மை, களைப்பு, உடல் அசதி, முடி உதிர்தல், தொற்றுநோய், மன அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது.

இதற்காக லைப் அலைவ் சிகிச்சை மையத்தில் நவீன முறையில் சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அதாவது உணவுக் கட்டுப்பாடோ மருந்துகளோ அறுவை சிகிச்சையோ இல்லாமல் உடல் எடையை குறைக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இப்பிரச்சினையால் பாதிக்கப்படும் நபர்களுக்கு முழு பரிசோதனை நடத்தி உடல், உணர்வு மற்றும் மன ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்த வழி வகை காணப்பட்டுள்ளது.



இதற்காக தனித்துவம் வாய்ந்த மருத்துவர்கள் மூலம் உயிரி ரீதியான ஹார்மோன்கள், பாதுகாப்பான மருத்துவ சிகிச்சை, சமச்சீரான உணவு, சத்தான உணவுகள் மூலம் இவை அளிக்கப்படும்.

மேலும் பிரத்தியேக உடல் எடையை குறைக்க ஜீரோனா லேசர் சிகிச்சை மூலம் 6 முதல் 11 இஞ்ச் வரை கொழுப்புகளை குறைக்க முடியும்.

இந்த சிகிச்சை முறை ஆசியாவிலேயே டெல்லி, மும்பை மற்றும் தற்போது சென்னையில் அறிமுகப்படுத்தப் பட்டு உள்ளது.இந்த லேசர் கருவி அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு மருத்துவ சான்றிதழ் பெறப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.